கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.62/2018**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 27.01.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 27.01.2026 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | முத்துலட்சுமி | வயது | 55 |
| கணவர் பெயர் | சுந்தரமூர்த்தி | கிராமம் | மஞ்சக்கொல்லை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனது தந்தையாரின் பெயர் தங்கராசு மற்றும் தாயாரின் பெயர் பச்சையம்மாள். பெற்றோருக்கு சொந்த ஊர் திருச்சி என்றால் சரியல்ல நான் பிறந்ததும் வாண்டையார்குப்பம். வாண்டையார்குப்பம் ஆனது மஞ்சக்கொல்லைக்கு அருகில் தான் உள்ளது. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் ஞாபகமில்லை. எனது குடும்ப அட்டையில் எந்த விலாசத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மஞ்சக்கொல்லை தான்.

2. வழக்கு சொத்தின் புல எண்.189/3 ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் எனக்கு நினைவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 22 செண்ட் என்று குறிப்பிட்ட நிலையில் புல எண்.189/3 எந்த இடத்தில் 22 செண்ட் அமைந்து உள்ளது என்றால் மேற்புரத்தில் அமைந்துள்ளது. 22 செண்ட்டில் உள்ள மேற்புரத்தில் உள்ள 11 செண்ட்க்கு மட்டும் தான் அசல் வழக்கு எண்.168/2010 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கீழ்புரத்தில் உள்ள 10 செண்ட்யை நான் கலைச்செல்வத்திற்கு கிரயம் கொடுத்துவிட்டேன். கிரையம் கொடுக்கும் சமயத்தில் காலிமனையாக தான் இருந்தது.

3. 11 செண்டிற்கு நீதிமன்ற மூலம் ஒப்புதல் எடுக்கும் சமயத்தில் கூரை வீடு இருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ஆனது தான் அந்த ஒப்புதல் ரசீது என்றால் சரிதான். ஒப்புதல் எடுத்த சொத்தனாது எனது அனுபவத்தில்

தான் உள்ளது என்றால் சரிதான். அந்த 11 செண்ட்டில் என்ன உள்ளது என்றால் ஒரு ஷீட் போட்ட வீடு உள்ளது. ஷீட் போட்ட வீட்டை தவிர இதர இடங்கள் காலிமனையாக தான் உள்ளது அவை எனது அனுபவத்தில் தான் இருக்கிறது. இடத்தை சுற்றி கம்பிவேலி ஆனது அமைக்கப்பட்டுள்ளது.

4. ஒப்புதல் எடுத்த 11 செண்ட் இடத்திற்கான பட்டா எனது பெயரில் உள்ளதா என்றால் எனது பெயரில் தான் உள்ளது. பட்டா எண் என்னவென்றால் 169 அல்லது 163 இருக்கலாம். கலைச்செல்வனிடம் 10 செண்ட் கிரயம் கொடுத்த நிலையில் என்னிடம் இருக்கும் 11 செண்டிற்கும் பட்டாவனது உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது என்னிடம் 12 செண்ட் உள்ளது. உட்பிரிவு செய்யப்பட்ட பட்டா எண் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த பட்டாவின் நகலனாது என்னிடம் உள்ளது என்றால் சரிதான். இதுவரை இவ்வழக்கில் எனது தரப்பு ஆவணமாக நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. குமாரசாமியும் நானும் உறவினாரா என்றால் இல்லை. குமாரசாமி மகள் பெயர் அம்சவள்ளி என்றால் சரிதான். அம்சவள்ளியின் கணவர் பெயர் சுப்பிரமணி. அம்சவள்ளியும் சுப்பிரமணியும் வெளியூரை சேர்ந்தவர்கள். அவர்கள் தாவா கிராமத்தில் மனை வாங்கி குடி இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்தார்கள் என்றால் சரிதான். அம்சவள்ளி சுப்பிரமணி மகள்கள் ஜீவா மற்றும் தமிழ்மணி என்றால் எனக்கு தெரியாது.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- E.Swetha
Additional District Munsif
Chidambaram